DEPOSITION OF WITNESS
( Chapter XXIII Code of Criminal Procedure)
***

IN THE COURT OF SUBORDINATED JUDGE MADURANTAKAM

Calender :
Miscellaneous :
Sessions : SC 78/2020
Deposition of Witness for : PW 2

| Name. | திரு. கோகுல்ராஜ் |
|---|---|
| Father /Husband Name | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day 16.04.2025

**எதிரிகள் ஆஜர்.**

**CMP. 2/2025ல் பகரப்பட்ட உத்தரவுப்படி .அ.சா.1 மீண்டும் அழைக்கப்பட்டு எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1) எதிரிகள் எனக்கு உறவு முறை என்று சொன்னால் சரிதான். எதிரிகளுக்கும் , எனக்கும் உறவு முறையில் ஏற்கனவே பிரச்சனை இருந்ததா என்றால் இல்லை. இறப்பிற்கு நானும், அ.சா.1 ம் காலையில் ஒன்றாக சென்றோம். அ.சா.1 தான் சாவை சீக்கிரம் எடுங்கள் என்று கூறினார் என்றால் சரிதான். எத்தனை மணிக்கு சாவு எடுத்தார்கள் என்று எனக்கு தெரியாது. அ.சா.1 சொல்லி கேட்காததால் தான் பிரச்சனை ஏற்பட்டது என்றால் சரிதான். அன்றைய தினம் 27.05.2016. நேரம் தெரியாது. சாவு எடுப்பதற்கு முன்பே நானும், அ.சா.1ம் வீட்டிற்கு சென்றுவிட்டோம் என்றால் சரிதான். எதிரிகள் என் வீட்டிற்கு வந்ததாக கூறும் நேரம் இரவு 8.00 மணி இருக்கும். யார் கதவை திறந்தார்கள் என்றால் எதிரிகள் வெளியே கத்திக் கொண்டிருந்ததால் நான் வந்து கதவைத் திறந்தேன்.

2) நாங்கள் குடியிருக்கும் தெருவில் சுமார் 80 குடியிருப்பு வீடுகள் உள்ளன. சம்பவத்தை அந்த பகுதியில் இருந்து சுமார் 10 நபர்கள் பார்த்தார்கள். யார் கையில் ஆயுதம் இருந்தது என்றால் அவர்கள் வரும் பொது கையில் ஆயுதம் இல்லை. அதன் பிறகு ஆயுதம் இருந்தது என்றால் 1வது எதிரி கையில் ஆயுதம் இருந்தது. எனக்கு உச்சந்தலையில் அடிப்பட்டது. என்னை அடித்து மருத்துவமனை செல்லும்வரை நினைவு இருந்தது. மதுராந்தகம் அரசு மருத்துவமனைக்கு இரவு சுமார் 9.00 மணி அளவில் அழைத்துச் செல்லப்பட்டேன். செங்கல்பட்டு மருத்துவமனைக்கு இரவு 9.30

மணிக்கு சென்றோம். சென்னை மருத்துவமனைக்கு சென்றோம் என்றால் இரவு 10.00 மணிக்கு சென்றோம். என்ன ஆயுதம் வைத்திருந்ததாக கூறுகிறேன் என்றால் 2அடி கொண்ட இரும்பு பைப் வைத்திருந்தார்கள். எந்த கையால் அடித்தார்கள் என்று எனக்கு தெரியாது. பின்னால் வந்து அடித்தார்கள்.

3) போலிசார் மருத்துவமனையில் வைத்து என்னை விசாரிக்கவில்லை. சம்பவம் நடந்து இரண்டு மாதங்கள் கழித்து என்னை என் வீட்டில் வைத்து விசாரித்தார்கள். சம்பவம் நடைபெறும்போது என்னுடன் சேர்த்து 5 நபர்கள் இருந்தார்கள்.

**மறுவிசாரணை – இல்லை.**